5. அறிக்கைகள் அளித்தல்

(அ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் நான், மக்களுக்காக நான் என்று ஆட்சி நடத்தும் வாழும் தெய்வமே! நேற்று விதி 110-ன்கீழ் மூத்த குடிமக்கள் அரசுப் பேருந்துகளில் கட்டணம் இல்லா பயணம் செய்யலாம் என்று அறிவித்த மனிதநேயமிக்க தலைவியே! இன்று அரசு ஊழியர்களுக்கெல்லாம் தாயாக விளங்கி விதி 110-ன்கீழ் அனைத்து அரசு ஊழியர்களுக்கும் வாழ்வை வழங்கிய என்னுடைய தெய்வமே! தமிழகத்தில் இருக்கிற மக்களுக்கெல்லாம் ஐந்தாண்டு காலமாக என்னென்ன அறிவிப்புகளை வெளியிட்டார்களோ அத்தனை அறிவிப்புகளையும் முழுமையாக நிறைவேற்றியுள்ளார்கள். இன்று எதிர்க் கட்சிகள் எல்லாம் அரசு ஊழியர்களை வைத்து அரசியல் செய்யலாம் என்ற கனவையெல்லாம் மாற்றி, அரசு ஊழியர்களுக்கு பெரிய வரப்பிரசாதத்தை ஏற்படுத்திக் கொடுத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 12-20

வருகின்ற 2016 சட்டமன்றத் தேர்தலிலே 234-க்கு 234 இடங்கள் என வெற்றி வாகை சூட இருக்கின்றார் மாண்புமிகு அம்மா அவர்கள். வருகின்ற 24 ஆம் தேதி, அம்மா அவர்களுடைய 68-வது பிறந்த நாள் விழாவிலே, மாண்புமிகு அம்மா அவர்கள் எல்லாம் வல்ல இறைவன் அருளால் நீடூழி வாழ வேண்டுமென்று வாழ்த்த வயதில்லை என்று சொன்னாலும், மாண்புமிகு அம்மா அவர்கள் நீடூழி வாழ வேண்டும் என்று சொல்லி, அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2015-2016 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 188-வது முதல் 216-வது வரையிலான 29 அறிக்கைகளைக் குழுவின் தலைவர் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.